**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 693/2024**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உஷா | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | கோபாலகிருஷ்ணபிள்ளை | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 21th, 2025.

**(5ம் எதிரி ஆஜரில்லை. 5ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்புகளை கவனித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என்னுடைய பக்கத்து வீட்டில் குடியிருந்து வருபவர்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எதிரிகள் அவர்களுடைய வீட்டிற்கு தெற்கிலுள்ள தெரு வழியாக நாங்கள் நடக்கக்கூடாது என பிரச்சனை செய்தார்கள்.

நானும், என்னுடைய மகன் சதீஷ்குமாரும் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 09.00 மணியளவில் அந்த தெரு வழியாக மேற்கு சைடில் உள்ள ஒரு வீட்டில் ஊசி போடுவதற்காக சென்றோம். அப்போது, அந்த தெரு வழியாக வரக்கூடாது என்று சொல்லி எதிரி வைகுண்டமணி கம்பை வைத்து என்னுடைய இடது கையில் அடித்தார். என்னுடைய மகன்கள்

வந்து தடுத்தார்கள். என்னுடைய மகன்களை எதிரிகள் அனைவரும் சேர்ந்து அடித்தார்கள். என்னுடைய இடது கையில் காயம் ஏற்பட்டது. என்னுடைய பிரவீன்குமாருக்கு இடது கை தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. சதீஷ்குமாருக்கு காயம் ஏற்படவில்லை. அதன் பிறகு நானும், என்னுடைய மகனும் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். அங்கு 10 நாட்கள் சிகிச்சை பெற்றேன். சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு கடையம் காவல்நிலையத்திற்கு போய் புகார் செய்தேன். போலீசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.21 18:40:22 +0530